செ.வெ.எண்: 07 நாள்: 03.09.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் சித்த மருத்துவதுறை சார்பில் மூலிகை தாவரக் கன்றுகளை பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.09.2021) வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் சித்த மருத்துவதுறை சார்பில் மூலிகை தாவரக் கன்றுகளை பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.09.2021) வழங்கினார்.

இந்திய அரசின் ஆயஷ்துறை சார்பில் தேசிய மூலிகை தாவரவாரியம் மற்றும் தமிழ்நாடு மூலிகை தாவரவாரியம் இணைந்து 75வது சுதந்திர தின விழா கொண்டாடுவதன் பொருட்டு தேசம் முழுவதும் 75 இலட்சம் மூலிகை தாவரக் கன்றுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் சித்த மருத்துவ துறை மூலம் நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையத்தில் பொது மக்களுக்கு (1000 நபர்) மூலிகை தாவர கன்றுகளான ஓமவள்ளி, வெற்றிலை, கருந்துளசி, துத்தி இலை, குப்பைமேனி, நித்தியக் கல்யாணி, கொய்யா, பிரண்டை, நெல்லி, ஆவாரை, சிறுபீளை மற்றும் முக்கிய மூலிகைகளான நிலவேம்பு, சிறியாநங்கை, இஞ்சி, மஞ்சள், ஆடாதொடை போன்ற மூலிகை தாவரக் கன்றுகள் இலவசமாக வழங்கியும் மேலும், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையாக பொதுமக்களுக்கு கபசுரக்குடிநீர் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி மருந்து பொட்டலங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் திரு.மரு.பத்மநாபன், சித்த மருத்துவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**